---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் (''நிலையம்'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிலையத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிலையத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிலையத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிலையம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிலையத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிலையம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிலையத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிலையத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிலையத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 48 ஆம் பந்தியின் பிரகாரம் தேவையான அல்லது அனுமதி வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர வருமானம் செலவினங்களில் ஈடுசெய்ய | தொழில்நுட்ப கையளித்தல் வணிக செயற்திட்ட செலவினக் கணக்குகளில் செலவினமாக வரவு வைத்து உபகரண பயன்பாட்டு வருமான | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முடியாதிருந்த போதும் நிலையத்தால் ரூபா 90,785,732 செலவினம் வருமானத்தில் ஈடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கிற்கு (Equipment Usage Income) செலவான பெறுமதி, செலவினக் கணக்கில் ஈடுசெய்யப்படாமல் வருமான மூலத்தின் கீழ் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 65 மற்றும் 75 ஆம் பந்திகளின் பிரகாரம் சொத்து ஒன்றின் பயன்தரு ஆயுட்காலம் மற்றும் பெறுமானத் தேய்வு முறைமை, குறைத்து ஒவ்வொரு ஆண்டிலும் அறிக்கையிடல் காலப் பகுதி முடிவடைகின்ற திகதியின் போது மீளாய்வு செய்து எதிர்பார்க்கப்படுகின்ற நிலைமையில் மதிப்பீடுகளில் மாற்றங்கள் ஏற்படுமாயின் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீடு ஒன்றின் மாற்றமாக கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் நிலையத்திற்குச் சொந்தமான கிரயம் ரூபா 639,670,381 ஆன நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் பயன்தரு ஆயுட்காலம் மீளாய்வு செய்து மதிப்பீடின் மாற்றங்களை கணக்கீடு செய்வதற்கு சீராக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிறுவனத்தின் கணக்குகளில் தற்போது முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் பயன்படுத்தக் கூடிய பயன்தரு மட்டத்தில் காணப்படுகின்ற சொத்துக்களை இனங்கண்டு மீண்டும் மீளாய்வு செய்து கணக்கீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகள் தயாரிக்கும் போது இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற | 2023 நவம்பர் 17 ஆந் திகதியில் இருக்க வேண்டிய | ஆண்டுக்குரிய சகல செலவினங்களையும் |

| | | |
|---|---|---|
| பெறுமதி ரூபா 1,144,250 ஆன பணம் மற்றும் நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த பட்டியல் 2024 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்தது. அவ்வாறான குறைபாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கொள்வனவுகளையும் வெளிப்படுத்தி கணக்குகளைத் தயாரிக்கக் கூடிய பிரகாரம் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை ஸ்தாபித்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 12,169,999 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக கடந்த ஆண்டின் மிகை ரூபா 22,523,175 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 34,690,174 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற மீண்டெழும் மானியம் ரூபா 52,927,327 மற்றும் பிற்போட்ட வருமானம் ரூபா 68,722,801 இனால் குறைவடைந்தமைக்கு எதிராக பெறுமானத் தேய்வு ரூபா 25,727,209 இனால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | போதியளவான மனிதவளம் இல்லாமையின் காரணமாக தரவு உள்ளீட்டின் வேகம் மற்றும் கட்டுப்பாட்டு வேகத்திற்காக நடமாடும் செய்முறையுடன் அநேகமான தொலைவில் உள்ள தரவுகளை பெற்றுக் கொள்ளும் முறைமைக்கான செயற்திட்டம் (Multi input Remote Data Acquisition system with mobile App for data logging and control phase 1) மற்றும் பற்றரி மீள் வலுவூட்டுவதற்காக (Development of a Battery charger for Battery charging Applications) அபிவிருத்தி செய்வதற்கான ஆராய்ச்சி செயற்திட்டம் கால ரீதியில் நிறுத்தியதன் காரணமாக ஏற்பட்ட | உரிய துறைகளில் அறிவுள்ள பொறியியலாளர்கள் போதியளவில் இல்லாதிருந்தமையும் ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக நிறுவனம் பயன்படுத்திய நிதியினை பயன்படுத்துவதற்கு ஏற்பட்டமையினாலும் மிகவும் வணிக ரீதியான சாத்தியவளம் உள்ள செயற்திட்டத்திற்காக முன்னுரிமை வழங்கியதன் காரணமாகவும் முதலாவது செயற்திட்டம் தற்காலிகமாக நிறுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. இரண்டாவது செயற்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இதுவரையில் தீர்மானிக்கப்படாதிருந்த போதும் இதற்காக ரூபா 582,446 தொகைக்கு இறக்குமதி செய்யப்பட்ட இலத்திரனியல் துணைப்பாகங்கள் இலத்திரணியல் துறைகளில் ஏனைய செயற்திட்டங்களுக்காக பயன்படுத்த முடியுமாக | செயற்திட்டத்திற்காக நிதியினைச் செலவிடுவதற்கு முன் அதன் பயன்தரும் தன்மை தொடர்பாக பொருத்தமான மதிப்பீடு அல்லது சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவினம் சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்களாக இருந்தது. | உள்ளதுடன் அதில் பெறப்பட்ட அறிவு மற்றும் அனுபவங்களும் பயன்படுத்தப்படுகின்றது. | |
| (ஆ) | நிலையத்துக்கு உரிய வாகனங்கள் கடமை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படாமல் காணப்பட்ட சந்தர்ப்பத்தின் போது ஒரு வாடகை வாகனம் பெற்றுக் கொள்ளும் தேவை ஒன்று காணப்படாதிருந்த போதிலும் 2023 யூலை மாதத்திற்காக ரூபா 176,992 செலவினம் ஒன்று வாடகை வாகனத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் பல்வேறு வணிக செயற்திட்டங்களுக்காக வாடகை வாகனங்களை ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு உரிய ஆண்டின் போது கேள்வி கோரப்பட்டிருந்தும் கடந்த திசெம்பர் முதல் 2024 பெப்ரவரி வரை நிறுவனத்தின் பல்வேறு செயற்திட்டங்களுக்காக வாடகை வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இதற்காக 2023 யூலை மாதம் வாடகை வாகனத்திற்காக செலவிடப்பட்டது என கூறப்படுகின்ற ரூபா 176,992 தொகை நியாயமான செலவினமாக இருந்தததை குறிப்பிடுகின்றோம். மேலும் இந்த வாகனங்களுக்கான பணம் உரிய செயற்திட்டத்துடன் தொடர்புடைய பிரிவுகளின் மூலம் அறவிடப்பட்டுள்ளது. தூர பிரயாண சேவை செயற்திட்டங்களுக்கு நிறுவனத்தில் உள்ள வான் வண்டியைப் பயன்படுத்துவதற்கு அனேகமாக நிறுவனத்தில் நாளாந்த கடமைகளை (குறுகிய பிரயாணங்கள்) மற்றும் உத்தியோகத்தர் போக்குவரத்துக்கு இந்த வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றமையால் அனேகமாக ஈடுபடுத்த முடியாதிருந்தமையும் போதியளவான சாரதிகள் நிறுவனத்தில் காணப்படாமையினாலும் ஆகும். | செலவினங்களைச் செய்யும் போது சகல நேரங்களிலும் சிக்கனமாகவும் செயற்திறனாகவும் செலவிடல் வேண்டும். |
| (இ) | நிலையத்தால் மீளாய்வாண்டின் போது ரூபா 360,042,769 வருமானம் ஒன்று உழைக்கப்பட்டிருந்ததாக | நர்ட் நிலையத்தின் நிர்வாக மற்றும் நிதி மற்றும் ஏனைய செலவினங்களைக் குறைக்கும் மட்டத்தில் பேணிச் செல்வதற்கு விசேட கவனம் செலுத்தி | செலவினங்களைச் செய்யும் போது சகல நேரங்களிலும் சிக்கனமாகவும் செயற்திறனாகவும் |

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட போதிலும் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 57,959,681 மாத்திரமாக இருந்ததுடன் செலவிடப்பட்ட நிர்வாக, நிதி, ஏனைய செலவினங்கள் ரூபா 326,548,352 ஆகும். அதன் பிரகாரம் உள்ளபடியாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து ரூபா 268,588,671 பற்றாக்குறை ஒன்று பெறப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மொத்த செலவினம் (பெறுமானத் தேய்வு) தவிர கவனத்தில் கொள்ளக் கூடிய அளவினால் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் 2023 ஆம் ஆண்டில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் உழைக்கப்பட்ட இலபம் ரூபா 57,959,681 ஆக இருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அது ஓயர் மட்டத்தில் காணப்படுகின்றது. அவ்வாறு நிலையத்தின் வருமானம் உழைக்கின்ற செயற்திட்டங்களை கட்டி எழுப்புவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தி தற்போது நிலையத்தின் வியாபார அபிவிருத்திப் பிரிவு ஒன்று (BDC) தனிப்பட்ட ரீதியில் ஸ்தாபித்து வருமானம் உழைக்கும் திட்டம் இடப்பட்டு அமுல்படுத்தப்படுகின்றது. | செலவிடல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைநூலின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த அறிக்கையின் வரைவு ஒன்று சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் நிலையத்தால் வருடாந்த ஆண்டறிக்கை வரைவு ஒன்று நிதிக்கூற்றுத் தொகுதியுடன் சமரப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்த சுற்றறிக்கையின் | 2022 இன் ஆண்டறிக்கையின் வரைவு தற்போது வரிசை அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. 2023 இன் ஆண்டறிக்கை வரைவு செய்யப்பட்டுள்ளதுடன் 2023 இன் இறுதி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை கிடைத்த பின்னர் வரிசை அமைச்சுக்கு அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறித்துரைத்த திகதியில் ஆண்டறிக்கை உரிய தரப்பினருக்கு சமர்ப்பிப்பதற்கு முடியுமான வகையில் நேர காலத்தில் தயாரித்து தாமதம் இன்றி தயார்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டுக்குரிய ஆண்டறிக்கை கணக்காய்வுத் திகதியான 2024 மே 15 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |

## 4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலற்றல் அறிக்கையின் பிரகாரம் ஒட்டு மொத்த இலக்கை அடைந்து கொள்ளும் சதவீதம் 60 சதவீதம் மாத்திரமாக இருந்ததுடன் செயலல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரதான 04 பணிகளுக்காக நிதியேற்பாடு வழங்கப்பட்ட மொத்த தொகையில் பெறுமதி ரூபா 60 மில்லியன் ஆக இருந்த போதிலும் செலவிடப்பட்ட உள்ளபடியான செலவினம் ரூபா 32.639 மில்லியன் அதாவது ஒட்டு மொத்த ஒதுக்கீட்டில் 54.4 சதவீதம் மாத்திரம் ஆகும். | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் செயற்பாடுகளுக்காக ரூபா 60 மில்லியன் நிதியேற்பாடு 2023 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் திறைசேரியில் இருந்து நிலையத்திற்கு விடுவிக்கப்பட்ட தொகை ரூபா 7.6 மில்லியன் மாத்திரம் ஆகும். அதன் பிரகாரம் நிலையத்தின் உள்ளக நிதியேற்பாட்டினையும் பயன்படுத்தி செயல்நடவடிக்கைத் திட்டத்தை கட்டி எழுப்புவதற்குரிய செயல் முன்னேற்றம் அடைந்து கொள்ளப்பட்டுள்ளது. | இயலுமானவரை பொருத்தமான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்து அதற்கு இணங்க முயற்ச்சி செய்தல் வேண்டும். |